வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 89

வியாழக்கிழமை 23 பெப்ரவரி 2023 | மாசி 11 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50
பக்கங்கள் 12

யாழில் தொடர்ச்சியாக

# மாடு திருடும் மாபியாக்கள்; இரவில் மக்கள் அச்சத்தில்!

## கால்நடை வளர்ப்போருக்கு பெருநஷ்டம் மாதாந்தம் 50-60 மாடுகள் களவு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக மாடுகள் திருடப்பட்டு இறைச்சியாக்கப்படுவது அதிகரித்துள்ள நிலையில், வாழ்வாதாரத்துக்காகக் கால்நடைகளை வளர்ப்பவர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இந்தத் திருட்டுக்களின் பின்னணியில் ஒரு 'மாபியாக் குழு' இயங்குவதாகவும், இதனால் தனக்கு பல லட்சங்கள் நஷ்டமேற்படுகிறது எனவும், எனினும் அது தொடர்பில் எவரும் அக்கறை கொள்ளவில்லை என்று அவர்கள் விசனிக்கின்றனர். »11



## 'ஊடக சாம்ராச்சியப் பேரரசு' 'உதயனுக்கு' நேற்று விருது



யாழ்ப்பாணம், பெப்.23
நெருக்கடியான சூழ்நிலையில் சைவத் தமிழரின் விடிவுக்காக பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வீர உணர்வை வெளிக்கொணரும் - பறைசாற்றும் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு இந்து சமயப் பேரவையால் 'ஊடக சாம்ராச்சியப் »11

சென். பற்றிக்ஸ் – யாழ்ப்பாணக் கல்லூரி

## பொன் அணிகளின் போர் நாளை ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், பெப். 23
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகளின் போர்' துடுப்பாட்டத் தொடரின் 106ஆவது ஆட்டம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நாளை, நாளைமறுதினம் என இரு தினங்கள் இடம்பெறவுள்ளது. »10

## இலங்கைப் புலனாய்வுப் பிரிவு 'சி.ஐ.ஏ.' அதிகாரியின் கீழா?

### சர்ச்சையைக் கிளப்பினார் வீரவன்ஸ

கொழும்பு, பெப்.23
அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.ஏ.) அதிகாரி ஒருவரின் கீழ், இலங்கை அரச புலனாய்வுச் சேவையின் (எஸ்.ஐ.எஸ்.) புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் முடிவெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா? இது தொடர்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்தவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார். »10

## மேலதிக கொடுப்பனவு 15 வீதத்தால் குறைப்பு!

### சுகாதார அமைச்சு உத்தரவு

கொழும்பு, பெப்.23
சுகாதார அமைச்சின் மருத்துவர்கள் மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களின் மேலதிக நேரம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் 15 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.
சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த விடுத்துள்ள »11

## ஜனாதிபதிக்கு எதிர்ப்பு: 18 பேரின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.23
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண »10

வனவள, வனஜீவராசிகள் திணைக்களங்களின்

## ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

கிளிநொச்சி, பெப்.23
கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 764 ஏக்கர் காணிகள் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக் களங்களின் ஆளுகையில் உள்ளன. மக்களின் வதிவிடங்கள், வயற்காணிகள், ஏனைய அபிவிருத்திக்கான காணிகள் என அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்குரிய »11

யாழ். போதனா மருத்துவமனையில்

## தண்ணீரில் கிருமித் தொற்று 400 பேர் வரையில் பாதிப்பு!

### தற்போது நிலைமை கட்டுப்பாட்டில்

யாழ்ப்பாணம், பெப்.23
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குடிதண்ணீரில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாக மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட சுமார் 400 பேர் பாதிப்புக்குள்ளாகினர். அவர்களில் »11

## தமிழர்களின் உரிமைகளை பாதுகாத்தாலே விமோசனம்

### வெளிவிவகாரத்துறை அமைச்சர் அறிவுரை

கொழும்பு, பெப்.23
தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஒன்றாக வாழும் மக்கள் என்பதை உணர்ந்துகொண்டு அவர்களுக்கு சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களின் சுய உரிமை பாதுகாக்கப்படும் வகையில் அவர்களது மொழி மற்றும் கலாசாரம் போன்றவைகளுக்கு உரிய வாய்ப்புகளை »10

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு பணம் அனுப்பும் மக்கள்!

கொழும்பு, பெப்.23
தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லாது திண்டாடும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மக்கள் தபாலகம் ஊடாக பணம் அனுப்பிய சுவாரசிய சம்பவம் பாதுக்க »11

13 Edition
Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
MARCH மார்ச் 3 4 5
JITF 2023
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்னும் 8 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு உதவுங்கள்

## அமெ. தூதுவர் ஜூலி சங்கிடம் மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, பெப். 23

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக இல்லாதொழித்து, அமைதியான முறையில் போராடுகின்ற உரிமை பாதுகாக்கப்படுவதற்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

AMNESTY INTERNATIONAL

இலங்கையில் அண்மைக்காலங்களில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள்மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருவதுடன், போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் போராட்டங்களில் பங்கேற்பவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட மிக மோசமான சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங்கிடம் 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான வலியுறுத்தலை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

'அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் இலங்கை அரசாங்கத்தால் மிக மோசமாக அடக்கப்படுவதையும், எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவதற்கான ஆயுதமாக மாற்றப்பட்டிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதையும் அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் பார்த்திருக்கின்றார். அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டமானது மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு எதிரானதாகக் காணப்படுவதாகவும், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான மக்களின் சுதந்திரத்தை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் என்றும் அவர் பகிரங்கமாகவே கூறியிருக்கின்றார்' என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (ம)

## சுயாதீனத்தை இழந்த தேர்தல்கள் ஆணைக்குழு

### சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 23

உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டமையானது, தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத் தன்மையை இழந்து நிற்கின்றது என்பதையே காட்டுகின்றது - என்று தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

2022ஆம் ஆண்டு நடத்தப்படவேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, ஒருவருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணையம் அறிவித்தது. இலங்கையில் தேர்தல்கள் ஆணையம் என்பது சுயாதீனமானது என்ற அடிப்படையில், தேர்தலை நடத்துவதற்கான முழுப்பொறுப்பும், கடமையும் தேர்தல்கள் ஆணையகத்துக்கே உரியது. ஆனால் தேர்தலை நடத்துவதற்கு திறைசேரி நிதிப்பங்களிப்பைச் செய்யவேண்டும், பொலிஸார் பாதுகாப்பளிக்க வேண்டும். அரச அச்சகக் கூட்டுத்தாபனம் வாக்குச் சீட்டுகளை அச்சிடவேண்டும். வாகனங்களுக்கான எரிபொருள்களை எரிபொருள் கூட்டுத்தாபனம் வழங்கவேண்டும். இவை எல்லாம் சீராகவும் தொய்வின்றியும் நடைபெற்றால் மாத்திரமே குறிக்கப்பட்ட திகதியில் தேர்தலை நடத்தமுடியும். மேற்கண்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி இறுதி முடிவுகள் எதனையும் எடுக்காமல், சுயாதீன ஆணைக்குழு என்பதன் காரணமாக வெறுமனே தேர்தலுக்கான திகதியை அறிவித்ததும், வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான திகதியை அறிவித்ததும் தேர்தல்கள் ஆணையத்தின் பொறுப்பற்ற மற்றும் அறிவுமுதிர்ச்சியற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது.

தேர்தல்கள் ஆணையத்தின் எழுந்தமானமான தேர்தல் குறித்த அறிவிப்பு, 800க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை எடுத்து, தேர்தலில் போட்டியிடுவதற்கான நிலையைத் தோற்றுவித்தது. இப்பொழுது தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்தால், அதற்கான தார்மீகப் பொறுப்பை தேர்தல்கள் ஆணையம் ஏற்று அவர்கள் இழந்த ஊதியத்தினைத் திரும்ப வழங்கிட வேண்டும். தேர்தல்கள் ஆணையம் தனது சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அகங்காரத்துடன் தேர்தலை அறிவித்தது. இதனால் அரசியல் கட்சிகளும், அப்பாவி வேட்பாளர்களும் அநாவசியமாக செலவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன், மக்களும் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். சுயா தீனத்தன்மையை உறுதிப்படுத்த முயற்சித்த தேர்தல்கள் ஆணையம் தனக்குச் சுயாதீனத்தன்மையே இல்லை என்பதை உணர்ந்திருக்கும் - என்றுள்ளது. (ம)

### ரூ. 1,033 பில்லியன்

## உள்நாட்டுக் கடனைச் செலுத்தவும் திக்குமுக்காடுகிறது அரசாங்கம்

கொழும்பு, பெப். 23

உள்நாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்கான திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பத்திரங்கள் மூலம் ஆயிரத்து 33 பில்லியன் ரூபாவை அரசாங்கம் கடனாகப் பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள அரசாங்கம் உள்நாட்டுக் கடன் பொறியிலும் சிக்கியுள்ளது.

உள்நாட்டில் பெற்ற கடன்களைச் செலுத்துவதற்கு மீளவும் கடன்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் பிரச்சினைக்குரிய சூழல் உருவாகும். இதனைத் தவிர்க்க அரசாங்கம் முறையான திட்டங்களை வகுக்கவேண்டும் என பேராதனைப் பல்கலை பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டினார். (ச-இ)



## சு.க.வேட்பாளரின் வாடி விஷமிகளால் தீக்கிரை

யாழ்ப்பாணம், பெப். 23

உள்ளூராட்சித் தேர்தலில் நெடுந்தீவு 2 ஆம் வட்டாரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் நெடுந்தீவுப் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர் ஒருவரின் வாடி விஷமிகளால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த பாக்கியநாதர் எயுசேவியர் என்பவரின் வாடியே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

வாடியினுள் இருந்த கடற்றொழில் உபகரணங்கள் உள்ளிட்ட சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. (ஒ-14)

## நாட்டின் பணவீக்கம் ஜனவரியில் வீழ்ச்சி!

### தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் தரவு

கொழும்பு, பெப். 23

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த ஜனவரி மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த வருடம் டிசெம்பரில் 59.2 சதவீதமாக இருந்தது. இந்த வருட ஜனவரியில் 53.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை உணவுப் பணவீக்கம் கடந்த டிசெம்பர் மாதத்தில் 59.3 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், ஜனவரி மாதத்தில் 53.6 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

உணவல்லாப் பணவீக்கம் கடந்த டிசெம்பரில் 59 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில் ஜனவரியில் 52.9 சதவீதமாகப் பதிவாகியுள்ளது எனச் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

### ஆசிரியர் பற்றாக்குறை:

## உ/த பரீட்சை விடைத்தாள் மதிப்பீடுகள் ஒத்திவைப்பு!

கொழும்பு, பெப். 23

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் பிற்போடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவிக்கையில், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான ஆசிரியர்கள் விண்ணப்பம் குறைவடைந்துள்ளது. அதன்காரணமாக விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் சில நாள்களுக்குப் பிற்போடப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

இதுகுறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஸ்டாலின் கூறுகையில்,

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதல்ல. அதனால் ஆசிரியர்கள் அந்தப் பணிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு பின்னடிக்கின்றனர் எனத் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலத்தைப்போன்று மன்னாரில் 8 இராணுவச் சோதனைச் சாவடிகள்

## ம. உரிமை ஆணைக்குழுவிடம் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டு!

மன்னார், பெப். 23

போர்க்காலத்தைப் போன்றே தற்போதும் மன்னாரில் 8 இராணுவ சோதனைச் சாவடிகள் தொடர்ந்து காணப் படுகின்றன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் மன்னார் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது. உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவியுமான ரோகினி மாரசிங்க தலைமையிலான குழு மன்னாருக்கு கடந்த சனிக்கிழமை பயணம் மேற்கொண்டிருந்தது.



அப்போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையிலான குழுவுக்கும் மனிதஉரிமைஆணைக்குழுவுக் கும் இடையிலான சந்திப்பொன்று மன்னார் நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது மன்னார் பிரஜை கள் குழு தெரிவித்ததாவது:-

மன்னாரில் தொடர்ந்து இராணுவ சோதனைச் சாவடிகளை அமைத்து பயணங்களின்போது ஆண்கள், பெண்கள் இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு வரு கின்றனர். வேறு மாவட்டங்களில் இல்லாத நடைமுறையாக மன்னா ரில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லும்போது மீனவ அடையாள அட்டைகளைக் கடற்படையினிடம் காண்பித்த பின்னரே மீன்பிடிக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக இராணுவத்தின ருடன் கலந்துரையாடியபோது, போதைப் பொருள்களைத் தடுக் கவே சோதனைகளை மேற் கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் இன்னும் போர்க்காலத்தைப் போன்று 8 இராணுவ சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றன. குஞ்சுக்குளம், பறையநாலன்குளம், மறிச்சுக் கட்டி, வங்காலை, ஆண்டான் குளம், மன்னார் பாலம், தாராபுரம், மன்னார் சங்குப்பிட்டி வீதி ஆகிய வற்றில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன - என்றனர்.

அதன்பின் கருத்துத்தெரிவித்த இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர்;

மன்னாரில் ஆண்கள், பெண்கள் இராணுவத்தினரால் உடற்சோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரு வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இராணுவம் எப் பொழுதும் பொலிஸாருக்கு உதவி யாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் சோதனைச் சாவடிகளில் அதிகமான இராணுவத்தினரும் ஓரிரு பொலிஸாருமே இருப்பதை அவதானிக்கமுடிகின்றது - என் றார். (ஒ-14.60)

# வலி. வடக்கு மக்களுக்காக சர்வதேசத்திடம் நிதி கோரல்!

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

வலி.வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான உதவிகளை பெற்றுக்கொள்ள சர்வதேச நாடுகளிடம் நாடியுள்ளோம் என யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவ பாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் வலி. வடக்குப் பிரதேசத்தில் கடந்த 33 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 108 ஏக்கர் காணி கடந்த 3 ஆம் திகதி எம்மிடம் கையளிக்கப்பட்டது. அரசாங்கத்தால் சிறிதுசிறிதாக மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படினும் மாவட்ட செயலகத்துக்கு சில இடர்பாடுகள் உள்ளன.

காணிகளின் உரிமையாளர்கள் முழுமையாக கையேற்று உரிய பாவனைக்கு உட்படுத்தினால் மாத் திரமே தொடர்ந்தும் காணிகளை விடுவிக்கக்கூடிய தாக இருக்கும். காணியின் உரிமையாளர்கள் அங்கு போகாத காரணத்தால் சட்டவிரோத செயல்கள் இடம் பெறுகின்றன எனவும் பெறுமதியான பொருள்கள் களவாடப்படுகின்றன எனவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மக்கள் காணிகளை வந்து பார்த்துவிட்டு செல்வதை விடுத்து காணியை முறையாக பயன்படுத்துவதனூ டாக தங்களின் உடைமைகளை உரிமைகோருவதற் கான செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியும்..

இதேவேளை மீள்குடியமர்ந்தவர்களுக்கு தலா 38ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது. அதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும் உதவிகளை வழங்குவதற்கு மேற்குலக சர் வதேச நாடுகளிமிருந்தும் உதவிகளை நாடியுள் ளோம்- என்றார். (ச-27)

# பாடசாலை மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல்

## சந்தேகநபருக்கு மறியல்

முல்லைத்தீவு, பெப் 23

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட் டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என புதுக் குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவி கல்வி நடவடிக்கைக்காக ஆசிரியையின் வீட்டுக்குச் சென்றவேளை அங்கிருந்த நபர் ஒரு வரே பாலியல் ரீதியாக தன்னைத் துன்புறுத்தியதாக மாணவி தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவி பெற்றோரிடம் தெரியப்படுத்தி யதையடுத்து புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடளிக்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரைக் கைதுசெய்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற் படுத்தினர். சந்தேகநபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத் தரவிட்டது. (ச-19)

# வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் நியமனம் ஏற்கத்தக்கதல்ல!

## மாகாணசபை முன்னாள் கல்வியமைச்சர் சுட்டிக்காட்டு

வடக்குமாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் பதவிக்கு அடுத்த தரப்பட்டியலில் உள்ள ஒருவர் நிய மனம் செய்யப்படாமல் சட்டவிரோ தமானதும் முறைகேடானதுமான நியமனம் இடம்பெற்றுள்ளது.

இதற்கு வடக்குமாகாண ஆளுநர் பொறுப்புக்கூறவேண்டும் - இவ் வாறு நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வியமைச்சர் கந்தையா சர் வேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குமாகாணத்தின் சுகாதார அமைச்சின் சுகாதாரசேவைகள் திணைக்களப் பணிப்பாளராக திலிப் லியனகே நியமிக்கப்பட்டுள் ளார். முன்பதாக வடக்கு மாகாணத் தின் சுகாதார நிர்வாக சேவைகள் ஆணையாளராக மருத்துவ கலா நிதி கேதீஸ்வரனின் பதவிக்காலம் நிறைவடைந்ததையடுத்து அவரது இடத்துக்கு பெரும்பான்மையினத் தவரான திலிப் லியனகே நியமிக் கப்பட்டுள்ளார்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பிரதி ஆணையாளராகக் கடமை யாற்றி அனுபவம் வாய்ந்த மருத் துவ கலாநிதி நந்தகுமார் சுகாதார நிர்வாக சேவையாளர் பட்டியலில் அடுத்த தரவரிசையில்முன்னணியில் உள்ள நிலையில். இந்தப் பட்டியலில் 68 ஆவது இடத்தில் இருக்கும் திலிப்லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு மாகாணத் திணைக்கள ஆணையாளரை - ஏனைய மருத் துவர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல் மாகாண சபைக்குரிய அதிகாரமாகும்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமனம் செய்யப் பட்டுள்ள திலிப் லியனகே தான் தோன்றித்தனமாகப் பல்வேறு விட யங்களை கையாள்கிறார் எனவும் மாகாண ஆளுநருக்குஅறிவிக்காது தன்னிச்சையாக இடமாற்றல்கள் மற் றும் நியமனங்களை மேற்கொள்கி றார் எனவும்அவர்மீது குற்றச்சாட்டுக் கள் எழுந்துள்ளன. இதுகுறித்து ஆளுநருக்கு முறையிடப்பட்டும் ஆளுநர் மௌனம் காத்து வருகின் றார் எனவும் கூறப்பட்டது.

இந்த நியமனமானது முறைகேடா னதும் சட்டவிரோதமானதுமாகும். இந்த நியமனத்தை ஆளுநர் ரத்து செய்ய வேண்டும். தவறினால் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்- என்றார். (ச-27)

# போதனாவின் மருத்துவக்கழிவுகள் தெல்லிப்பழையில் எரிக்கப்படாது!

## பிரதிப்பணிப்பாளர் யமுனானந்தா அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யின் மருத்துவக்கழிவுகள் இனிவரும் நாள்களில் தெல்லிப்பழையில் எரிக்கப் படாது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத் துவர் யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யின் மருத்துவக்கழிவுகள் இதுவரை தெல்லிப்பழையில் எரிக்கப்பட்டு வந்தன. அங்கு உரிய சுகாதாரமுறைகள் பின்பற் றப்படாமல், சுற்றுச்சூழலிலுள்ள மக்க ளுக்கு ஆபத்தான முறையில் மருத்து வக்கழிவுகள் எரிக்கப்படுவதாக பல முறை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது. ஆபத்தானமுறையில் மருத்து வக்கழிவுகள் எரிக்கப்படுவது தொடர் பான காணொலிகளும் அடிக்கடி வெளி யாகியுமிருந்தன.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் தலைமையில் இந்தக் கூட்டம் நடந்தது. அத்துடன், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் தெல்லிப்பழையில் மருத்துவக்கழிவுகள் எரிக்கப்படும் இடத்துக்குக் களவிஜயமும் செய்தனர். இதனையடுத்து, யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக்கழிவுகளை இனிமேல் தெல் லிப்பழையில் எரிப்பதில்லையென்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது.

### கோம்பயன் மணல் மயானத்தில் எரிக்கத் தடைபோட்ட ஆளுநர்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யின் மருத்துவக்கழிவுகளை எரிப்பதற்கு அண்மைக்காலமாக பொருத்தமான பிறி தொரு இடம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. வடமராட்சி கப்பூது வெளி, மண்டைதீவு, வேலணை, அராலிப் பகுதிகளில் எரிக்கும் மையங்களை நிறுவ முயன்று, அந்தப் பகுதியிலிருந்து கிளம்பிய எதிர்ப் பினால் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. தற்போது 5ஆவது இடமாக கோம்பயன் மணல் மயானம் தெரிவு செய்யப்பட்டி ருந்தது. எனினும், அங்கு மருத்துவம னைக் கழிவுகளை எரிக்க முடியாதென ஆளுநர் தடைபோட்டுள்ளார். இதனால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக் கழிவுகளை எரிப்பதற்காகத் தனி யானதொரு இடம் அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் பின்னடைவைக் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பேரிடரில் பூத்த 'அயா' உறவினரிடம் ஒப்படைப்பு

அங்காரா, பெப்.23

துருக்கி - சிரியா நிலநடுக்கத்தின்போது தொப்புள்கொடி கூட அறுபடாமல் மீட்கப்பட்ட 'அயா' என்ற பெண் குழந்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி-சிரியாவில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் ஏராளமான வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். அந்த நிலநடுக்கத்தின்போது வடமேற்கு சிரியாவில் கட்ட இடிபாடுகளில் கர்ப்பிணி ஒருவர் குழந்தையொன்றை பிரசவித்து உயிரிழந்தார்.

தொப்புள்கொடி கூட அறுபடாமல் அந்தப் பச்சிளம் பெண் குழந்தையை இடிபாடுகளிலிருந்து மீட்புக்குழுவினர் மீட்டனர். பேரிடரில் பூத்த குழந்தையான இந்தக் குழந்தைக்கு மருத்துவமனையால் 'அயா' எனப் பெயர்சூட்டப்பட்டது. 'அயா' என்றால் அரபியில் அதிசயம் என்று பொருள். குழந்தையின் செய்தி உலகெங்கும் பரவிய நிலையில் குழந்தையை தத்தெடுத்து வளர்க்க ஆயிரக்கணக்கானோர் ஆர்வத்துடன் போட்டியிட்டனர். இந்த நிலையில் சட்டபூர்வ நடைமுறையின்படி 'அயா'வை தந்தை வழி உறவினர்களிடம் மருத்துவமனை ஒப்படைத்துள்ளது. (ச-இ)

# அல்கொய்தாவுக்கு புதிய தலைவர்

■ ஐ.நா. எச்சரிப்பு

■ அமெரிக்காவுக்கு பேரிடி



வொஷிங்டன், பெப். 23

உலக நாடுகள் பலவற்றாலும் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டு தடைசெய்யப்பட்ட அல்கொய்தா தனக்கான புதிய தலைவரை தேர்ந்தெடுத்துள்ளது என ஐ.நா. சபை எச்சரித்துள்ளது.

அல்கொய்தாவின் தலைவர்களான பின்லேடன், அல்ஜவாஹிரி ஆகியோரை அடுத்தடுத்து அழித்தொழித்துவிட்டோம் மார்தட்டி- பெருமூச்சு விட்டிருந்த அமெரிக்காவுக்கு இந்தச் செய்தி பேரிடியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவால் 3 தசாப்தங்களாகத் தேடப்பட்டு வரும் பயங்கரவாதியான சைஃப் அல்அடெல் என்பவரே அல்கொய்தாவின் சக்திவாய்ந்த தலைவராக தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்து நாட்டின் இராணுவ வீரராக வாழ்வைத் தொடங்கிய சைஃப் அல்அடெல் ஒரு பொறியியல் பட்டதாரி. மட்டுமன்றி, உலக அரங்கில் தேடப்பட்டுவரும் அதிபயங்கரக் குற்றவாளியும் கூட.

1981ஆம் ஆண்டு எகிப்து நாட்டின் அப்போதைய அதிபர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியிலேயே அடெலின் முதல் தீவிரவாத நடவடிக்கை தொடங்கியது.

1991 இல் அல்கொய்தாவுடன் தன்னை முழுவதுமாக இணைத்துக்கொண்ட பிறகு அடெல் நடத்திய அனைத்துத் தாக்குதல்களும் மிகப் பயங்கரமானவை. குறிப்பாக, அமெரிக்காவுக்கு எதிரானவை.

இந்தநிலையில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, அல்கொய்தா தலைவர் ஓசாமாவின் உயிருக்குக் குறிவைத்த அமெரிக்கா சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, 2011 இல் பாகிஸ்தானில் வைத்துக்கொல்லப்பட்டார்.

அதன்பின்னர், ஓசாமாவுக்கு வலதுகரமாகச் செயற்பட்ட அல்ஜவாஹிரி புதிய தலைவராக நியமித்தது அல்கொய்தா.

பல ஆண்டுகளாக அமெரிக்காவின் தொடர்ச்சியான தாக்குதல்களிலிருந்து தப்பிவந்த ஜவாஹிரி கடந்த ஆண்டு ஜூலையில் அமெரிக்காவின் ஆளில்லா விமான ஏவுகணை தாக்குதலால் ஆப்கானிஸ்தானில் வைத்துக் கொல்லப்பட்டார்.


6 மாதங்களுக்கு மேலாக அல்ஜவாஹிரி மரணம் குறித்தோ, புதிய தலைமை குறித்தோ எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் ரகசியம் காத்துவந்த அல்கொய்தா தற்போது தமது அமைப்பின் புதிய தலைவராக அல் அடெலை நியமித்துள்ளது எனத் திடுக்கிடும் தகவலை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கிறது. (ச-இ)



உக்ரைன் - ரஷ்யா போர் ஆரம்பமாகி நாளையுடன் ஓராண்டு நிறைவடையும் நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உக்ரைனுக்கு நேற்றுமுன்தினம் அறிவிப்பின்றி திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார். உக்ரைன் அதிபரை சந்தித்து இருதரப்பு போர் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தார். எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும், போர் நடைபெறும் நாட்டுக்கு இதுவரை சென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தன்னலம் துறப்போம்!


என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு. வாழ்க்கை என்பது நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று இன்பமும் துன்பமும் கலந்ததாகும். கரும்பு ஆலையில் நெரிக்கப்படும்போதுதான் இன்சுவையைத் தருகிறது. பொன் புடமிடப்படும்போதுதான் ஜொலிக்கின்றது. துன்பம் வரும்வேளையில் 'எமக்கு மட்டும் ஏன் இந்தத் துயரம்? நான் என்ன தவறு செய்தேன்?' என்று நினைப்பதுண்டு.




துன்பங்களும் சுமைகளும் புதிய விடியலுக்கான நுழைவாயில்கள் என்று எண்ணி எமது வாழ்வைச் சீர்செய்துகொண்டால் சுமைகள் சுகங்களாக மாறும். இறையாட்சியுள் நுழைய தூய்மை வேண்டும். இறை நம்பிக்கையுடன் துன்பத்தை ஏற்று மேலெழும்போதே தூய்மையும் தெளிவும் பெற்று பிறரின் இன்னல்களைப் புரிந்துகொள்ளும் பக்குவமும் கிடைக்கும். நாமாகத் தேடிக்கொண்ட சிலுவைகளாயினும் பிறர் சுமக்கும் சிலுவைகளாயினும் பொறுமையுடன் சுமந்து இலக்கை அடையவேண்டும். இதனையே இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு கூறி நிற்கிறது. கரைவதற்காகவே காற்றைத்தேடும் கற்பூரம்போல, ஒளிவழங்க உருகும் மெழுகுவர்த்திபோல எம்மை இழந்து பயன்கொடுப்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும் உற்சாகமும் பெருக்கெடுக்கும்.

**இடபம்:** சிலருக்கு பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மனவருத்தம் ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை சாதகமாக முடியும். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண்அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் இனம்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். உங்களுக்குத் தேவையான உதவி களும் கிடைக்கும். வீண் விவாதம் ஏற்படும்.

**கன்னி:** தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.



**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூல மாக முடியும். தேவைகளைப் சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கியூ.ஆர். முறையை நீக்குவது சரியா?

எரிபொருள் பங்கீட்டு விநியோகத்துக்கான கியூ.ஆர். முறைமை அடுத்த மூன்று மாதங்களில் முற்றாக நீக்கப்படும் என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர. 'மின்சார சபையைக் கட்டமைக்கும் வேலைப்பாடுகள் தற்போது முழுமைபெற்றுவிட்டன. இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக கியூ.ஆர். நடைமுறை நீக்கப்படும்' என்றவாறாகவும் தெரிவித்திருக்கின்றார் அவர்.

கோத்தாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்த நாட்டில் எரிபொருளுக்காக போராட்டங்களும் – கலவரங்களும் – வரிசைகளுமே எஞ்சியிருந்தன. ஒரு லீற்றர் பெற்றோலை கள்ளச்சந்தையில் 5 ஆயிரம் ரூபாவரையில் கொடுத்துப் பெற்ற அவலமும் தாராள மாகவே நடந்தேறியது. எரிபொருள் வரிசையில் நாள்கணக்கில் காத்திருந்தவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தப் போக்கை ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் கொண்டுவந்த கியூ.ஆர். திட்டம் மாற்றியது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. ரணில் அரசாங்கம் மேற்கொண்ட குறிப்பிட்டுக்கூறும் வகையிலான ஒரேயொரு வெற்றிகரமான திட்டமும் இதுதான். இன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் இல்லை. ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றோலைப் பெறுவதற்காக ஒருநாள் முழுக்கக் காத்துக்கிடக்கும் அவலமும் இல்லை. அனைவருக்கும் எரிபொருள் சீராக விநியோகிக்கப்படுகின்றது. இவ்வாறிருக்கையில் கியூ.ஆர். முறையை நீக்குவது என்ற அறிவிப்பானது மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடியை – இக்கட்டான நிலையை வலிந்து ஏற்படுத்தும் நகர்வன்றி வேறொன்றும் இல்லை.

நாடு இன்னமும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிபெறவில்லை. கோத்தாபய அரசாங்கத்தில் இருந்த டொலருக்கான நெருக்கடிகள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. மருத்துவப் பெரு நெருக்கடி நாளுக்குநாள் கழுத்தை நெரிக்கும் வகையில் வியாபித்துச்செல்கின்றது. கல்வித்துறை நெருக்கடியான நிலைக்குள் நின்று ஊடாடிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு இக்கட்டான நிலையில் கியூ.ஆர். முறையை நீக்குவது என்ற முடிவானது நாட்டின் பொருளாதார நிலையை பின்னோக்கியே நகர்த்தும் என்பதில் இரண்டாவது கருத்தில்லை.

பெற்றோல் மற்றும் டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் தாராளமான இருப்பை உறுதிப்படுத்திய பின்னர்தான் கியூ.ஆர். முறையை நீக்கவேண்டும். ஆனால், அவ்வாறு தேவைக்கும் அதிகமான இறக்குமதியை – இருப்பை – உறுதிப்படுத்தக்கூடிய நிலையில் இலங்கை இப்போதில்லை. அடுத்த ஓரிரு வருடங்களில் அந்தத் தாராள நிலையை அடைவதற்கான சாத்தியங்களும் இல்லை. இப்படியானநிலையில் கியூ.ஆர். முறையைநீக்குவதானது மீண்டும் எரிபொருள் பதுக்கல்களுக்கே வழிவகுக்கும். இது வரிசையுகங்கள் தோற்றம் பெறுவதற்கும், சங்கிலிக் கோர்வையாக இதர பெருநெருக்கடிகள் ஏற்படுவதற்குமே வாய்ப்புக்களை ஏற்படுத்தும்.

வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு பெரும்பாலானோருக்குப் போதுமானதாக இருக்கின்றபோதிலும், சிலருக்கு இன்னும் அதிக எரிபொருள் தேவை என்ற நிலை இருப்பதை மறுப்பதற்கில்லை. கூடுதல் எரிபொருள் தேவையுள்ளவர்கள் பிரத்தியேக விண்ணப்பங்கள் வாயிலாக தமக்குத் தேவையான எரிபொருளை தற்போது பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான சிக்கலை நீக்குவதற்கு சிறப்புப் பொறிமுறையொன்றைத்தான் அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். அதைவிடுத்து பொத்தம்பொதுவாக கியூ.ஆர். முறையை நீக்கிவிடுவதானது நெடிய பின்னடைவுக்குள்தான் நாட்டைத்தள்ளும். குறைந்தபட்சம் ஒரு தேர்தலைக்கூட நடத்துவதற்குத் திராணியற்று நாணய நிதியத்தின் தயவில் நாட்டைக் கொண்டுசெல்ல வேண்டிய நிலையிலுள்ள அரசாங்கம் தன் முடிவை மறுபரிசீலனை செய்வது மிகமிக அவசியம்!

நாளொரு நல்வார்த்தை

"நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ. மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே" –நியேட்சே




### 2014இல் கைதான
# 21 அரசியல்கைதிகள் நீதிமன்றால் விடுவிப்பு
### அவர்களில் ஒருவர் ஏற்கனவே உயிரிழப்பு

கொழும்பு, பெப். 23

விடுதலைப்புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாணத்திலும் கொழும்பிலும் கைது செய்யப்பட்ட 21 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 2014ஆம் ஆண்டு முதல் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.
2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இவர்கள் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனையடுத்து இவர்கள் அனைவரும் எந்த வித நிபந்தனைகளும் இன்றி கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம)

# இலங்கை நெருக்கடி தொடர்பில் ஜி-20 அமைப்பில் ஆலோசனை!

கொழும்பு, பெப். 23

இலங்கை உட்பட பல நாடுகளின் பொருளாதார நெருக்கடிகள், கடன் பிரச்சினைகள் மற்றும் பணவீக்க நிலைகள் தொடர்பில் ஜி-20 அமைப்பின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்தியவங்கி ஆளுநர்கள் கலந்துரையாடவுள்ளனர்.
இந்தியாவின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில், மிகப்பிரதானமான பேசுபொருளாக இது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க திறைசேரியின் செயலர் ஜெனட் ஜெல்லனும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கான கடன் நிவாரணத்தை விரைவாக வழங்க சீனாவை இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மிகப்பெரிய பிரதான கடன் வழங்குநரான சீனா உட்பட இதர கடன் வழங்குநர்களிடம், கடன்களை பெரிய அளவில் குறைக்குமாறு கேட்டுக்கொள்வதன் மூலம் கடனாளி நாடுகளுக்கு உதவ ஜி20 நாடுகளுக்கு இந்தியா ஒரு முன்மொழிவைத் தயாரித்து வருவதாக கடந்தவாரம் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

நாளை 24.02.2023 வெள்ளிக்கிழமை மாசி 12

சுபநேரம் : 06.30 – 08.00
ராகுகாலம் : 11.00 – 12.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நிலம் அறுதியாகபோகிறதா?

விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.

076-2488353

**நாஹா மருத்துவ நிலையம்**

அதி தீவிரமான கை, கால் செயலிழப்பு, முள்ளந்தண்டு பாதிப்பு, முழங்கால் சிரைட்டைதேய்வு, தீராத புண்கள், அல்சர், நீரிழிவு சிறுநீரக பாதிப்பு - *சிறப்புச்சிகிச்சை*

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (எசகமநிலீடு) மானிப்பாய்.

T.P.: 077 321 2740

**வாகனம் விற்பனைக்கு**

NP DAC - xxxx இலக்கமுடைய 2015 BOLERO MAXITRUCK PLUS விற்பனைக்குண்டு.

திருநெல்வேலி 077 978 2203


## பெயர் மாற்றம்

கிளாலி, எழுதுமட்டுவாழைச் சேர்ந்த 1959.10.ஏழாந் திகதி பளை பிரசவ நிலையத்தில் பிறந்த எனது பெயர் **பாக்கியம்** ஆகும். ஆயினும் பிறப்பு அத்தாட்சிப் பதிவேட்டில் **பாாக்கியம்** என பதிவாகியுள்ளது. ஆதலால் எனது பெயர் **பாக்கியம்** என்பதனை மீண்டும் உறுதிப் படுத்துவதுடன் இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs699) (2.6) **நல்லதம்பி பாக்கியம்**

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 . 12 . 1996



மறைவு 10 . 01 . 2023

## மகிந்தன் பிரியவதனா

எம் உயிரில் ஒன்றாய் கலந்து
எம் துயரத்தை போக்க வந்தவளே!
ஆனால் எம்மை துயரத்தில் ஆழ்த்தி
விட்டு போனவளே!
45 நாள் ஆனதம்மா!
உம் பிரிவு தந்த சோகங்கள்,
வடுக்களாய் நெஞ்சமதில் என்ன சொல்லி
ஆறுவது மனதையே எப்போதும் அழியாத
உன் நினைவுகள் நாதமாய் இசைமீட்டி
நிற்குதம்மா என்றும் உந்தன்
நினைவுகளுடன்! ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

**GPS விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.** **குடும்பத்தினர்**

(cs.23626) (2.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**செல்வி கவினிகா மதியழகன் (153 புள்ளிகள்)**

**செல்வி சயந்தவி சிவகுமார் (149 புள்ளிகள்)**

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிக்கு மேல பெற்ற எமது பாடசாலை மாணவர்களான செல்வி கவினிகா மதியழகன் (153 புள்ளிகள்), செல்வி சயந்தவி சிவகுமார் (149 புள்ளிகள்) ஆகிய இருவரையும் கல்வியில் மேலும் உயர்வுகளைப் பெறவேண்டும் என வாழ்த்துகிறோம். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். அவர்களை வழிப்படுத்திய **அதிபர்** மற்றும் **வகுப்பாசிரியர் திருமதி மைதிலி ஜெயபவான்** மற்றும் ஏனைய ஆசிரியர்களையும் தகைமைபெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர்:** பாடசாலைச் சமூகம்

**யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்**


# A/L பரீட்சைகளின் பின்

**Direct Offer**

**50%** விசேட கட்டணக்கழிவுடன் **புதிய பிரிவுகள்** ஆரம்பம்

**Diploma in Information Technology & Diploma in Office Automation**

Improve your understanding of both written & spoken English

**ENGLISH IELTS**

விசேட கட்டணச்சலுகைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு

CHER COLLEGE OF HIGHER EDUCATIONS AND RESEARCHES

No.131, Manipay Road, Jaffna.
021 221 0604
077 800 5204


## MINISTRY OF URBAN DEVELOPMENT & HOUSING
## DEPARTMENT OF BUILDINGS
## INVITATION FOR BIDS

**Balance Work of Construction of Chunnakam Post Office and Post Master's Quarters - Stage 01[Contract No: RPC/CE(Z2)-01/23]**

1. The Chairman, Regional Procurement Committee (Zone 2), on behalf of the Department of Buildings now invites sealed bids from eligible and qualified bidders for "Balance Work of Construction of Chunnakam Post Office and Post Master's Quarters - Stage 01" as described below and estimated to cost Rs.6.9 million.

   The construction period is 119 Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. Since the Estimated Value of Work to be performed under this procurement is below Rs.50 Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(iv) & Public Finance Circular No.03/2020.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade C8, C7 or C6 with the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
   "The bidders shall also register themselves with registrar of public contracts, Sri Lanka, in term of the Public Contracts Act No. 03 of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid. The procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate".

4. Interested bidders may obtain further information from the **Chief Engineer** (Zone 2), **Department of Buildings**, Beach Road, Gurunagar, Jaffna and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021-2222781 Facsimile: 021-2222781

5. A complete set of Bidding Documents in English language may be purchased by Interested bidders on the submission of a written application to the Chief Engineer (Zone 2), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna from 23.02.2023 until **09.03.2023** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred (Rs.2,500/-).

6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee (Zone 2), Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** Beach Road, Gurunagar, Jaffna to reach **on or before 10:00 hrs on 10.03.2023.** Bids will be opened soon after closing at the same address presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 77 Days from the date fixed for receiving of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;

   * in the form included in the **Section 09** in the Bidding document.
   * in favour of **Director General of Buildings**
   * for a amount of **Rs.100,000.00**
   * valid up to 22.06.2023
   * issued by one of the agencies indicated in the **clause 16.0** of the Schedule.

**Eng.G.R.S.B.Gamlath**
**Director Construction (Region 2)**
**Department of Buildings,**
**2nd Floor,"Sethsiripaya",**
**Battaramulla.**

(cr.35498)(2.6)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.04.1952 மறைவு 01.03.2017

## அமரர் சுந்தரமூர்த்தி பாலச்சந்திரன்

**திதி: பூர்வபக்க சதுர்த்தி (23.02.2023)**

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்......
காலம் எல்லாம் எம்மைச் சுமந்து
இனிய வாழ்வை எமக்கு அளித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
விண்ணுலகு சென்றிருந்தாலும் உங்கள்
அன்புக்கு விலை பேச முடியாது
எம்மை விட்டு பிரிந்து ஆறு ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் நினைவுகள்
நித்தமும் ஆயிரம் நிழலாடுகிறது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நெருஞ்சியோலை, பன்னாலை, தெல்லிப்பழை.**

*என்றும் உங்கள் நினைவுகளுடன்* **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் அறிமுக விழா** இந்தியா, தமிழ்நாடு கவிஞர் கலைச்செல்வி புலியூர்க்கேசிகனின் "நற்றிணைத் தலைவனின் நெஞ்சொடு கிளத்தல்" நூல் அறிமுக விழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப மையத்தில் இடம்பெறவுள்ளது. சி.புரந்தரா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கான வரவேற்புரையை ம.ஜெயகாந்தனும் தொடக்கவுரையை இரா.அருட்செல்வமும் அறிமுகவுரையை ஈ.குமரனும் வழங்கவுள்ளனர். (எ-இ)





கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகள்

2023.02.23

காலை 8.30 யாழ் பேராயர் சந்திப்பு
காலை 9.00 நல்லை ஆதின முதல்வர் சந்திப்பு
காலை 10.00 அனலைதீவு ஐயனார் கோவிலடி பொதுக்கூட்டம்
மாலை 2.00 கொம்பனிப்புலம், சண்டிலிப்பாய் பொதுக்கூட்டம்
மாலை 4.00 மூளாய் பிள்ளையார் கோவிலடி பொதுக்கூட்டம்
மாலை 5.00 பாரதி விளையாட்டுக் கழகம், அளவெட்டி பொதுக்கூட்டம்
மாலை 6.30 றக்கா வீதி, சுண்டுக்குழி மாபெரும் பொதுக்கூட்டம்

2023.02.24

காலை 8.30 நாக விகாராதிபதி சந்திப்பு
காலை 9.00 பச்சைப்பள்ளி வழிபாடு (நாவலர் வீதி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ.கிருபாகரன்
(கிருபா லேணர்ஸ் அதிபர்)
அமைப்பாளர்
ஐக்கிய மக்கள் சக்தி
X


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 25 • 08 • 1934

மறைவு 24 • 01 • 2023

கடந்த (24.01.2023) செவ்வாய்க்கிழமை
இறைபதம் எய்திய
எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி

### பஞ்சாட்சரம் செல்வரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

" செல்வபதி "
பாப்பாத்தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தனபாலசிங்கம் மயூரன் (Wembley London)

காரைநகர் பெரியமணலைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா பண்டாரிக்குளத்தில் வசித்துவருபவர்களாகிய தனபாலசிங்கம் (VTS & SONS கந்தானை) புஸ்பமலர் தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வன் மயூரன் கடந்த (11.02.2023) அன்று வெம்பிளி லண்டனில் (Wembley London) இறைபதமடைந்துள்ளார்.


அன்னார் மயூரதியின் அன்புக் கணவரும், அக்ஷனாவின் பாசமிகு தகப்பனாரும், மனோகரன், மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது உருத்திரபுரம் கிளிநொச்சியில் வசித்து வருபவர்களாகிய காலஞ்சென்ற தியாகராசா மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ரமணி, யோகீஸ்வரன், லவன், லக்ஷன், பிரதீபன் ஆகியோரின் மைத்துனரும், பெரியமணல், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சுந்தரம்மா, பேரம்பலம் செல்லம்மா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2023) வியாழக்கிழமை Belmont Community Hall, Kenton Lane Harrow, HA38RZ எனும் முகவிரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று Hendon Crematorium, Holders Hill Road, Mill Hill, NW17 INL எனும் முகவரியில் பகல் 2.45 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
தனபாலசிங்கம் வவுனியா 077 77 33358
மயூரதி (மனைவி) லண்டன்
0044 7308 656000

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பூவுலகில் 16 • 06 • 1936

புகழுலகில் 22 • 02 • 2023

### திருமதி சுப்பையா கனகபூசணம்

சுழிபுரம் மேற்கினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா கனகபூசணம் அவர்கள் நேற்று (22.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வரதராஜா கனகம்மா அவர்களின் அன்புத் தங்கையும், காலஞ்சென்றவர்களான வயிரமுத்து-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானம், சு.கனகாம்பாள், சந்திரகுமார், காலஞ்சென்ற கமலாம்பாள், இ.ஞானாம்பாள், காலஞ்சென்ற அ.சந்திரகலா, ஜெ.சூரியகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, எழிலரசி, இராஜேஸ்வரன், அருட்செல்வன், ஜெயரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகேஸ்வரி, கனகாம்பிகை, காலஞ்சென்ற கனகலிங்கம், ஞானசம்பந்தன், காலஞ்சென்ற மங்கயற்கரசி ஆகியோரின் சிறியதாயாரும், சுதர்சன்-தர்ஜினி, சபேசன்- டிசென்ஷா, சுதர்சனன்- துஷ்யந்தினி, சரணியா, சந்தோஸ், சாரங்கன், ஆதித்யன், ஆரணி, தாரணி, இராகுலன்-ஜனனி, திவ்யா, சௌமியா.ஜீவேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுபீட்ஷா, சுலக்ஷா, சித்தார்த், சஞ்சித், கவீஸ், இஷானிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2023), வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று திருவுடல் தகன கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத் தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

சுழிபுரம் மேற்கு
0771 665 861.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 23638) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் ஓவியப் போட்டியும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத் துக்கான நிலையம் மற்றும் ஐக்கிய நாடு கள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து நடத்திய ஓவியப் போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 2 மணிக்கு நடைபெற வுள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள ஓவியர்களி டமிருந்து பொருளாதார நெருக்கடியின் போதான வன்முறைகள், உணவுப் பற் றாக்குறை, வறுமை, போக்குவரத்துச் சிரமங்கள், அதிகரித்த வேலையின்மை, கல்வி, ஆரோக்கியம், ஊட்டச்சத்து, பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவம், விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டம், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் நிர்வாகம் போன்ற உப தலைப்புக்களில் வரையப்பட்ட ஓவியங் கள் கோரப்பட்டிருந்தன.

இந்தப் போட்டிக்கு அனுப்பப்பட்டுள்ள ஆயிரத்து 925 ஓவியங்கள் எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்திலும், வெளிப்புறத்திலும் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

முதல் 50 சிறந்த ஓவியங்களுக்கான பரிசில்களும், உள்ளூர் அரச திணைக் களங்களில் சட்டமிட்டு காட்சிப்படுத் தப்பட்டிருக்கின்ற மிகச்சிறந்த 10 ஓவி யங்களை அங்கீகரித்தலும், ஆறு வகைகளில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று இடங்களுக்கான வெற்றிக்கேட யங்களும், அனைத்து ஓவியங்களிலும் அதிசிறந்த ஓவியமும், சுவரோவியமாக வரையப்படும் ஓவியமும் பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கண்காட்சியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜாவும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்தின் முக்கியமான பிரதி நிதிகளும் ஆரம்பித்து வைக்கவுள்ள னர். (ஏ-இ)

# விழிப்புணர்வு ஆற்றுகை

யாழ்ப்பாணம், பெப்.23

மக்கள் களரி நாடக மன்ற மும் புலம் பெயர்வுக் கான சர்வ தேச அமைப் பும் (IOM) இணைந்து ஏற்பாடு செய் துள்ள விவாத அரங்க ஆற்று கையும் அதன் பின்னரான கலந்துரையா டலும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழ கத்தின் நாடக மும் அரங்கக் கலைகளும் துறையின் இணுவில் வளாகத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள் ளது.

இலங்கை யில் தற் போது சமூக பொருளாதார சீரற்ற நிலை காரணமாக ஏற்பட்டிருக்கும் சட்டவிரோத குடிப்பெயர் வின் அபா யத்தையும் தீமைகளையும் விளக்கி விழிப்பு ணர்வை ஏற் படுத்தும் முக மாக அரங்க ஆளுமை ஒகஸ்தா போல் இன் "ஒடுக்கப் பட்டோருக்கான அரங்கு" எனும் கருத்தியலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விவாத அரங்கு ஆற்றுகையை நடைபெறவுள் ளது. (ஏ-இ)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் முருகன் பாலசிங்கம்

ஓராண்டு கடந்தாலும் உங்கள்
- ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள்
- எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கிறதே.

நினைவுகளுடன்
சிறி இளங்கோ பாமா
(மருமகன் - லண்டன்)
அயிட்டியபுலம்,
கொற்றாவத்தை.

மண்ணில் 07.10.1937 விண்ணில் 05.03.2022

(cr.39295) (2.6)



## மரண அறிவித்தல்



### சண்முகம்பிள்ளை ஜெயானந்தம்

வட்டுக்கோட்டை வடக்கை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை ஜெயானந்தம் அவர்கள் 20.02.2023 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் பிள்ளை நாகேஸ்வரியம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கிரிசைநாயகி(ஓய்வு பெற்ற ஆசிரியை) இன் அன்புக் கணவரும் சுகன்ஜா பத்மராஜ், மனோஜ், காலஞ்சென்ற வாமிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும்பத்மராஜ் அவர்களின் அன்பு மாமனாரும் லக்ஸன் அவர்களின் பாசமிகு பேரனும் கருணானந்தசிவம்,பாலகுகானந்தம்,கோகுலதாசன் சிவச்செல்வி, பவானந்தம், சிவானந்தம் ஆகியோரின் அன்புச்சோதரனும், சச்சிதானந்தம், கோகுலநாயகி, பரமநாதர் சற்குணநாயகி, மகேஸ்வரன் சடாச்சரநாயகி, காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், பரமானந்தசிவம் வரிசிலைநாயகி, மற்றும் நடராசா கடாச்சரநாயகி, காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் சசிதரநாதன், தூயமணி, பானுமதி, கோகுலதாசன், கிஸோராணி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2023) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1957 மறைவு 18 . 02 . 2023



### தர்மலிங்கம் சாந்தகுமாரி (சாந்தா)

சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மாவிட்ட புரம், மடத்தடியை வாழ்விடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சாந்தகுமாரி கடந்த (18.02.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடாசிவம் - பஞ்சரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும், லக்ஸ்மன் (பிரான்ஸ்), தர்மலா (கனடா), கோகிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, முகுந்தன், கிரிஷாந் (சீனு) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜிஸ்காந் (சயு), சாய்சாந், ரீசாந், ஆரவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர் மீனதாஸ், ஜெயா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகம்மா, நல்லம்மா, பத்மராணி, பாலசிங்கம், முத்துலிங்கம், அமரர் சந்திரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2023) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இராசவீதி, நீர்வேலியில் உள்ள சரவணபவானந்தன் கோனேஸ்வரி (வீரசிங்கம் கனகம்மா - பெரிய மாமி) யின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு, சிவியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
தர்மலிங்கம் லக்ஸ்மன்
(பிரான்ஸ்)

(CS/23629)4.6

076 126 0185, 077 360 6887



## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 09 . 1940 இறப்பு 21 . 02 . 2023



### செல்லத்துரை பார்வதி

புத்தூர் கிழக்கு, புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பார்வதி அவர்கள் கடந்த (21.02.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் ,சின்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், கண்மணி மற்றும் பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வசீலன் (லண்டன்), செல்வபவன் (கனடா), செல்வரஜனி மற்றும் செல்வதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி, மலர்விழி, கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஸ்டன், சஸ்மிதா, அஸ்வின், அக்ஷயா, டிவானி, சாகித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக் காக பூதவுடல் புத்தூர் கிழக்கு அந்திராணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 623 5516
077 959 6667

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 236391) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச்சீட்டு மோசடி; விசாரணை ஆரம்பம்

கொழும்பு, பெப். 23

கடவுச்சீட்டு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் சிலர் நாளொன்றுக்கு சுமார் பத்து லட்சம் ரூபாவை மோசடி செய்து வருகின்றனர் என குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில், குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவிக்கையில்; கடவுச்சீட்டு விநியோகத்தில் தரகர்கள் குழுவொன்றும் சில அதிகாரிகளும் லஞ்சம் பெறும் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கமைய லஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணையின் அடிப்படையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலக உதவியாளர் ஒருவரும் மூன்று தரகர்களும் லஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொரிய மொழிப் புலமைத் தேர்வில் கலந்துகொள்பவர்கள் நாளொன்றுக்கு 7 பேர் கடவுச்சீட்டுப் பெறுவதற்கு வரும் நிலையில் அவர்களிடத்திலும் லஞ்சம் வாங்கும் மோசடி நடப்பதாகவும் அறியவருகிறது.

இதுதொடர்பில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு லஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

மின்கட்டண அதிகரிப்பால்

## உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு நிவாரணம் வழங்கவேண்டும்

### யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

தற்போதைய நெருக்கடியில் உற்பத்தித்துறை சார்ந்தோருக்கும் அரசாங்கம் நிவாரணம் வழங்கவேண்டும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மின்சாரக் கட்டணங்கள் 66 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பல்வேறு துறைகளிலும் பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே உற்பத்தித்துறை சார்ந்தோருக்கும் அரசாங்கம் கட்டாயமாக நிவாரணம் வழங்கவேண்டும். வர்த்தகத் துறை சார்ந்தோருக்கும் இந்த மின்கட்டண அதிகரிப்பானது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பொருள்களின் விலை மேலும் அதிகரித்து சாதாரண பொதுமக்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதில் இடர்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

அரிசி ஆலைகள் அரிசி விலையை அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அதேபோல மின்சாரத்தில் தங்கி இருந்து உற்பத்தியை மேற்கொள்ளும் சகலதுறைகளும் விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்குரிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. உற்பத்தித்துறை சார்ந்தவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது ஒரு வகையில் நிவாரணம் வழங்கவேண்டும். அல்லது உற்பத்தித்துறை சார்ந்த விடயங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கவேண்டும்.

எனவே இதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ஒ-14)

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு

## விண்ணப்பிப்போருக்கு முதலுதவித் தெளிவூட்டல்

கொழும்பு, பெப். 23

சாரதி அனுமதிப்பத்திரத்துக்காகப் புதிதாக விண்ணப்பிக்கும் அனைவருக்கும் முதலுதவி தொடர்பான அடிப்படைத் தெளிவூட்டலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக புதிதாக விண்ணப்பிக்கும் அனைவரும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்படும் முதலுதவிக் கருத்தரங்கில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வாகன விபத்துக்கு முகங்கொடுக்க நேரிடும் சந்தர்ப்பத்தில் அடிப்படை முதலுதவி பற்றிய அறிவு இன்மையின் காரணமாக விபத்தின் பாதிப்பு அதிகமாகின்றது.

ஆகவே, சாரதிகளுக்கு அடிப்படை முதலுதவி பற்றிய அறிவை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஒ-14-இ)

உள்ளூராட்சி உறுப்பினர்கள்

## 1,137 பேரின் உறுப்புரிமையை இடைநிறுத்துகின்றது ஐ.தே.க.

கொழும்பு, பெப். 23

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களில் ஆயிரத்து 137 பேரின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் ஏகமனதாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த உறுப்பினர்கள் ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் சம்பவங்கள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி

சாவகச்சேரி, பெப். 23

மிருசுவில் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14-9)

யாழ்.மாநகரசபையின்

## இடைநிறுத்தப்பட்ட கட்டடப்பணியை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 23

இடைநிறுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கட்டடத்தின் பணிகளைத் தொடர 600 மில்லியன் ரூபாவை வழங்க நகர அபிவிருத்தி அதிகாரசபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் அழிவடைந்த கட்டடத்தை புதிதாக அமைக்க 2 ஆயிரத்து 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு நல்லாட்சி அரசின் காலத்தில் அத்திபாரம் இடப்பட்டது. ஆயிரத்து 50 மில்லியன் ரூபா செலவிலான பணிகள் நிறைவடைந்திருந்தவேளை நாட்டின் பொருளாதார நெருக்கடியாலும் பொருள்களின் விலையேற்றம் காரணமாகவும் கட்டுமானப் பணிகள் முழுமையாகத் தடைப்பட்டன.

நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய சந்தை விலையில் எஞ்சிய பணியை முடிவுறுத்த மேலும் 3 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை எனக் கணக்கிடப்பட்டதோடு எஞ்சிய பணியை மேற்கொள்ளாத நிலையில் கட்டடத்தை மாநகர சபையிடம் கையளிக்க முற்பட்டனர்.

இதன் காரணமாக நகர மண்டபப் பணிக்காக யாழ்.மாநகரசபையின் 250 மில்லியன் ரூபாவை வழங்க கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதிய மாதாந்த அமர்வில் அப்போதைய முதல்வர் வி.மணிவண்ணன் சபையிடம் அனுமதி கோரினார். சபை அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்துக்கு கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி சென்ற தற்போதைய முதல்வர் இ.ஆர்னோல்ட், அழிவடைந்த கட்டடத்தை மத்திய அரசே முழுமையாகக் கட்டித்தர வேண்டிய கடப்பாட்டைக் கோரினார்.

அதற்கமைய மத்திய அரசின் நிதியில் நகர மண்டபத்துக்கு மேலும் 600 மில்லியன் ரூபா வில் பணியை முன்கொண்டு செல்ல நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் ஜனாதிபதி செயலகத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## ஆளுநரின் கடிதங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்க

### சுகாதார அமைச்சின் செயலருக்கு ஜனாதிபதியின் செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

வடக்கு சுகாதாரத்துறையின் இடமாற்றங்கள் மற்றும் நியமனம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் உதவிச் செயலாளர், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:- வடக்கு சுகாதாரத்துறையில் இடம்பெற்ற நிர்வாக முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினர் வடமாகாண ஆளுநருக்கு குற்றச்சாட்டுக்களை ஏற்கனவே வழங்கி வந்தனர்.

வட மாகாண சுகாதாரப்பணிப்பாளர் தொடர்பிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஆளுநர் செயலகம் வரை சென்றது.

இந்த நிலையில் வடக்கு சுகாதாரத் துறை தொடர்பில் ஆளுநர், மத்திய சுகாதார அமைச்சுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்தார். எனினும் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் அதற்கான நடவடிக்கைகள் தாமதமாயின.

ஆனால் தேர்தலைக் குறித்த திகதியில் நடத்தமுடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் வட மாகாண ஆளுநரால் மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒத்திவைப்பது தவறான முன்னுதாரணம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23

உள்ளூராட்சிசபை தேர்தலைப் பிற்போடுவது ஒரு ஆபத்தான முன்னுதாரணம் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தலைப் பிற்போடுவது ஓர் ஆபத்தான முன்னுதாரணம். இதனால் நாடு இறுதியில் சர்வாதிகாரத்தை நோக்கித் தள்ளப்படலாம். தேர்தல் பிற்போடப்படுவதால் இலங்கை சர்வதேச சமூகத்தின் மத்தியில் பெற்றுக்கொண்ட நம்பிக்கையை இழக்கநேரிடும். நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நம்பியிருக்கின்ற இந்தத் தருணத்தில் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளவேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம். நாட்டைக் காக்க முன்வரவேண்டியது அனைத்து கட்சிகள் சிவில் அமைப்புகள் மதத்தலைவர்களின் கடமை. உள்ளூராட்சித்தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெறுவதை உறுதி செய்யவேண்டும் என்று ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். எதிர்மறையான பெயர் உருவாவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பார்கள் என கருதுகின்றோம் - என்றார். (எ-இ)

# பயிர் அழிவை ஏற்படுத்தும் குரங்குகளைக் கொல்லலாம்

## அனுமதித்தது அரசாங்கம்

கொழும்பு, பெப். 23

பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் குரங்குகளைக் கொல்வதற்கு அரசாங்கத்தால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை விவசாயிகளுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

நாட்டில் வருடாந்தம் வனவிலங்குகளால் பயிர்கள் 40 சதவீதம் அழிக்கப்படுவதாக வனவிலங்குகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. காட்டுப்பன்றிகள், குரங்குகள், மயில்கள் உள்ளிட்ட வன விலங்குகளால் சுமார் 46 சதவீதம் பயிர்ச்சேதம் ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் பயிர்களை அழிக்கும் மயில்கள், குரங்குகள், டோக்மக்காக்கள், மர அணில்கள், முள்ளம்பன்றிகள் மற்றும் காட்டுப்பன்றிகள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட விலங்குகள் பட்டியலில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் வேறுவழியின்றி பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்தும் குரங்குகளைக் கொல்வதற்கு அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# கெற்பேலி மத்தியில் டெங்குச் சோதனை

சாவகச்சேரி, பெப். 23

கெற்பேலி மத்தியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையாக அங்குள்ள பொதுநோக்கு மண்டபத்தில் சிரமதானமும், அதேநேரத்தில் வீடுகளில் சோதனை நடவடிக்கைகளும் கிராம சமுர்த்தி உத்தியோகத்தர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருந்த அனைவருக்கும் துப்புரவு செய்வதற்காக 3 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் இன்று வியாழக்கிழமை மீள் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு துப்புரவு செய்யாதவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-159)

# சொற்பொழிவு

தென்மராட்சி - வரணி மாசேரி புராதன குருநாதர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு "பெரியபுராண" சிறப்புச்சொற்பொழிவு, ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில், தலைமையுரையை சைவப்புலவர் சி. கா. கமலநாதனும் சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் க.. கயிலைவாசனும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் நிகழ்வின் இறுதியில் சொற்பொழிவிலிருந்து மாணவர்களுக்கான வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-14)

# எரிபொருள் இறக்குமதிக்கு மூன்று நிறுவனங்கள் தெரிவு

கொழும்பு, பெப். 23

இலங்கைக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் திறன் கொண்ட மூன்று தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும், அதற்கான பிரேரணை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதிபெறப்படவுள்ளது என்றும் எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏறக்குறைய 10 தனியார் நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் 3 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

### தமிழர்களின்...

வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடந்த கொழும்பு துறைமுக நகர முதலீடுகள் சட்டவரைவு மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன மற்றும் மத பேதங்களுக்கு அப்பால் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். பன்முகத்தன்மை ஒருமைப்பாட்டுடன் ஆரம்பிக்கப்படும் பயணமே வெற்றி பெறமுடியும். அதன்மூலம் ஏற்படும் பொருளாதார முன்னேற்றமே நிலையானதாக அமையும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பன்முகத்தன்மை ஒருமைப்பாட்டுடனான பயணம் எமது முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியம். அந்த நிலைமை ஏற்படும்போதே எம்மால் சுயாதீனமாகச் செயற்படமுடியும். அவ்வாறில்லாவிட்டால் எப்போதும் சர்வதேசத்துக்கு கடன்காரர்களாகவே நாம் இருக்க நேரிடும். எமது நாட்டின் சுயாதீனம் என்பது வெறும் கனவாகவே அமையும்.

எந்த நாட்டுடனும் நாம் பகைமையுடன் செயற்படமுடியாது. அனைத்து நாடுகளுடனான நல்லுறவு எமக்கு மிக அவசியமானது. மேற்கத்தைய நாடுகளுடனான சிறந்த நல்லுறவு அவசியமாகும்.

நாட்டில் இறுதிப் போரின்போது இலங்கைக்கு வந்த ஒன்பது கப்பல்களை எமது படையினர் வெற்றிகரமாக அழிப்பதற்கு அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் உறுதுணையாக அமைந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. சர்வதேச நாடுகளுடனான நல்லுறவுக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் செயற்பாடுகள் மிகவும் காத்திரமானதாக அமைந்தன என்பதையும் மறந்துவிடக்கூடாது - என்றார். (அ-எ-இ)

### இலங்கை...

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் விக்ரோறியா நூலண்டின் இலங்கை வருகைக்கு சமாந்தரமாக, அமெரிக்க விமானப் படைக்கு உரித்தான இரண்டு விமானங்களில் 'பென்டகன்' அதிகாரிகள் 20 பேர் இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் புலனாய்வுப் பிரிவின் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க முதன்மை துணைப் பாதுகாப்புச் செயலர் தலைமையில் பென்டகனின் 20 பேர் கொண்ட அமெரிக்கக்குழு, அரச புலனாய்வுச் சேவைக்குச் சென்றுள்ளது. அங்கிருந்த அதிகாரிகள் ஆயுதம் அற்ற நிலையில் இருக்கையில், 'பென்டகன்' அதிகாரிகள் ஆயுதங்களுடன் சென்றுள்ளனர்.

இலங்கை அரச புலனாய்வுச் சேவைகளை சி.ஐ.ஏயின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சி இடம்பெறுகின்றதா? எந்தப் புலனாய்வுத் தகவலை அனுப்ப வேண்டும், எதை அனுப்பக்கூடாது என சி.ஐ.ஏயால் நியமிக்கப்படும் அதிகாரியே முடிவெடுக்கும் நிலை உருவாகும். 2001 ஆம் ஆண்டு இப்படி நடந்துள்ளது. 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நிலைமை மாறியது.

விமான நிலையத்தில் அதி முக்கியமான பிரமுகர்கள் (வி.வி.ஐ.பி.) வாசலின் ஊடாகவே இவர்கள் வந்துள்ளனர். இவர்கள் எதற்காக வந்தனர், என்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பதை ஜனாதிபதி, பிரதமர் இந்தச் சபைக்கு நாளையாவது (இன்று) தெளிவுபடுத்தவேண்டும் - என்றார்.

இதற்கு பிறிதொரு நாளில் அரசாங்கம் பதிலளிக்கும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். இது தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும், பாதுகாப்பு அமைச்சு ஊடாக இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். (அ-எ-44)

### பொன்...

இந்தத் தொடருக்கு எஸ்.எல்.ரி. மொபிட்டல் அனுசரணை வழங்குகின்றது. தொடருக்கான வீரர்கள் அறிமுக நிகழ்வும், கிண்ணத்தை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

கடந்த வருடம் நடைபெற்ற பொன் அணிகளின் போரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றிருந்தது. இம்முறை சொந்த மைதானத்தில் களமிறங்குவதால் இந்தத் தோல்விக்குப் பதிலடி கொடுக்கும் முனைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி களமிறங்குகின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் கிண்ணத்துக்கான ஆட்டம் (ஒருநாள் ஆட்டம்) மார்ச் 4ஆம் திகதியும் ரி-20 ஆட்டம் மார்ச் 7ஆம் திகதியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### ஜனாதிபதிக்கு...

வருகையின்போது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண நகரப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உட்பட 18 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். (அ-எ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாடு...

சாதாரணமாக மாடு திருட்டு என்று இந்த விடயத்தைக் கடந்து விடுகின்றபோதும், மாதாந்தம் 50 முதல் 60 மாடுகள் திருடப்படுகின்றன. அவற்றின் பெறுமதி பல லட்சங்கள் என்று கூறும் மாடுகளைப் பறிகொடுத்தவர்கள், அவை தொடர்பில் முறைப்பாடு செய்தும் எந்தப் பயனும் இல்லை என்று விசனிக்கின்றனர்.

**மாடு திருட்டு**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் பசுக்கள், காளைகள் இரவுவேளைகளில் திருடப்படுவது தற்போது நாளாந்தம் நடைபெறும் சம்பவமாக மாறியுள்ளது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் ஒரேநாளில் 4 மாடுகள் திருடப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 2 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடத்தப்படும் பசுக்கள், காளைகள் பெரும்பாலும் இறைச்சியாக்கப்படுகின்றன. இவை தொடர்பாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, அச்சுவேலி பொலிஸ் நிலையங்களில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மட்டும் கடந்த ஒரு மாத காலத்துக்குள் 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இரவுவேளையில் படி ரக வாகனத்தில் வருவோரே மாடுகளைத் திருடிச் செல்கின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர். ஒரு பிரதேசத்தில் திருடப்படும் மாடு பிறிதொரு பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டே இறைச்சியாக்கப்படுகின்றது. ஒரு குழு நடவடிக்கைகள் மூலமே இந்தத் திருட்டுக்கள் நடைபெறுகின்றன என்ற சந்தேகமும் பொதுமக்கள் மத்தியில் உள்ளது. இந்தநிலைமையால் இரவுவேளைகளில் தங்கள் கால்நடைகளுக்கு காவல் இருக்கவேண்டிய நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

**மக்களின் கேள்வி**

20 நாள்களுக்கு முன்னர் கோப்பாய் பிரதேசத்தில் திருடப்பட்ட பசு ஒன்று நெல்லியடிப் பிரதேசத்திலுள்ள பற்றைக்காடு ஒன்றில் இறைச்சியாக்குவதற்குத் தயாராக இருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது. அதைப்போன்று ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் அரியாலைப் பிரதேசத்தில் கடத்தப்பட்ட பசு ஒன்று தொண்டைமானாறு பிரதேசத்தில் இறைச்சியாக்கப்பட்ட நிலையில் அச்சுவேலிப் பொலிஸரால் மீட்கப்பட்டிருந்தது. இந்த மாடுகளை ஒரே கும்பலே திருடி வருவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இந்த மாடு திருடும் 'மாபியாக்கள்' ஒவ்வொரு ஊர்களிலும் தங்கள் ஆள்களை வைத்து, எங்கெங்கு மாடுகள் உள்ளன என வேவு பார்த்துவிட்டு, அவற்றை இரவு வேளையில் களவாடிக் கொண்டு செல்வதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு இரவுவேளையில் நடக்கும் இந்தத் திருட்டுக்களும், வெவ்வேறு பிரதேசங்களுக்கு மாடுகள் கடத்தப்படுவதும் பொலிஸாரின் கண்களில் சிக்காது எவ்வாறு நடைபெறுகின்றன என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். தொடர்ச்சியாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் மாடு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் எப்போதாவது ஒருவரே கைது செய்யப்படுகின்றனர். பொலிஸாரின் ஆசீர்வாதத்துடன்தான் இந்தத் திருட்டுக்கள் நடக்கின்றதா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது என மக்கள் கூறுகின்றனர்.

அதேநேரம் திருடப்படும் மாடுகள் இறைச்சியாக்கப்படும் நிலையில், அவை எவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றன என்ற கேள்வியும் பொதுமக்கள் தரப்பில் எழுப்பப்படுகின்றது. இறைச்சி விற்பனை நிலையங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பில் உள்ளபோது, எவ்வாறு திருடப்பட்ட மாடுகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பது புதிராக இருக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை**

மாடு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு மாடு திருடப்பட்டுள்ளது என்று கடந்து செல்லும் இந்த விடயத்துக்குப் பின்னால் மாதாந்தம் பல லட்சங்கள் இழக்கப்படுகின்றன. அவற்றை இழந்தவர்கள் வாழ்வாதாரத்தை நகர்த்தமுடியாது தவிக்கின்றனர். இந்த விடயத்தில் பொலிஸார் கூடிய அக்கறை எடுக்கவேண்டும். கால்நடைத் திருட்டைத் தடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (ஏ-26)

## 'ஊடக...

பேரரசு' விருது நேற்று வழங்கப்பட்டது.

பேரவை நடராஜர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் 'உதயன்' நிறுவனப் பணிப்பாளருமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் அவரது பாரியார் யசோதை சரவணபவன் ஆகியோரிடம் இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் விருதைக் கையளித்தார்.

பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் வீர உணர்வை வெளிக்கொணர்ந்தமைக்காக 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு 'ஊடக சாம்ராச்சியப் பேரரசு' விருது இந்து சமயப் பேரவையால் வழங்கப்பட்டது. (அ-ஏ)

## ஆக்கிரமிப்பில்...

நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் ஆக்கிரமிப்பிலுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலர்கள், வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி செயலகத்தின் சமூக விவகாரப் பணிப்பாளர் நாயகம் இந்த விடயம் தொடர்பில் ஆராய எமது மாவட்டச் செயலகத்துக்கு வந்திருந்ததுடன், களப் பயணம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார். அதன் தொடர் நடவடிக்கையாகவே இன்றைய (நேற்று) கலந்துரையாடல் நடைபெற்றது.

வனவளத் திணைக்களத்துக்கும், வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் உட்பட்ட காணிகளில் பொதுமக்கள் தேவைக்குப் பயன்படுத்தப்படும் காணிகள், எதிர்வரும் காலங்களில் அபிவிருத்திக்குத் தேவையான காணிகள் என்ற அடிப்படையில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது- என்றார். (ஏ-214)

## தண்ணீரில்...

50 பேர் வரையில் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குடிதண்ணீரில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாக பலர் பாதிக்கப்பட்டனர் என்று சில நாள்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் கேட்டபோதே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடி தண்ணீரில் காணப்பட்ட கிருமித் தொற்று தற்போது அழிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மலசலகூடக் கழிவு மற்றும் ஏனைய கழிவு நீர் என்பன சுத்திகரிக்கப்பட்டு பண்ணைக் கடலுக்குள் செலுத்தப்படுகின்றன. கடந்த 20 ஆண்டுகளாக இது நடைபெறுகின்றது. ஆயினும் தொழில்நுட்பத் தடங்கல் காரணமாக கடந்த இரு ஆண்டுகளாக இந்த நடைமுறையில் சில இடர்பாடுகள் ஏற்பட்டன. பண்ணைப் பகுதிக்கு நீர் அனுப்பும் இடத்தில் கசிவு ஏற்பட்டிருந்த நிலையில், பொதுமக்கள் மூலமாக அது தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதை ஆராய்ந்து அங்கிருந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கை காரணமாக மருத்துவமனையில் இருந்து கழிவுகள் வெளியேற்றும் நடைமுறை இரு நாள்கள் தடைப்பட்டன. அதனால் சேமிக்கப்பட்ட கழிவு நீரின் அளவு அதிகரித்திருந்தது.

மருத்துவமனையில் உணவுத் தேவைக்கும், ஏனைய தேவைகளுக்கும் இரண்டு வகையான நீரை பயன்படுத்துகின்றோம். மருத்துவமனையின் மூன்று கிணறுகளில் இருந்து பெறப்படும் நீர் மருத்துவமனையின் பொதுத் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

குளோரின் இடப்பட்டே தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வந்தது. திருத்த வேலைகள் காரணமாக கழிவு நீரின் சேமிப்பு அதிகரித்ததால் நிலமட்டத்தில் கழிவு நீரின் தன்மை அதிகரித்து கிணற்றில் கிருமிகள் கலந்தமையே இந்தப் பிரச்சினைக்குக் காரணம். அந்த நீரைப் பயன்படுத்திய மருத்துவமனை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சத்திரசிகிச்சைக்கூட உத்தியோகத்தர்கள், விடுதிகளில் கடமையாற்றுபவர்கள் ஆகியோர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டனர்.

இது எமக்கு உடனடியாகத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை கிணற்று நீர் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. மேலதிக குளோரின் இட்டு கிருமித் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆய்வுகூட அறிக்கையில் நீரில் ஒரு வகைப் பக்ரீரியா உள்ளமை கண்டறியப்பட்டது. மிகையான குளோரின் ஊட்டத்தின் மூலம் கிருமிகள் அழிக்கப்பட்டன.

தற்போது கிருமித் தொற்று நிலைமை சுமுகமாக உள்ளது. இது ஒரு தற்காலிகமாக ஏற்பட்ட பிரச்சினையே. திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதல்ல.

கிருமித் தொற்றுக் காரணமாக மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய மருத்துவமனைகளின் சுகாதார உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் என 400 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 50 பேர் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ஏ-26-20)

## மேலதிக...

அறிக்கையில் இந்தப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

பொதுச் செலவினங்களின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், மேலதிக நேரம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் 15 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. இது தவிர, எதிர்வரும் நாள்களில் மருத்துவமனைகள் தவிர ஏனைய சுகாதார அலுவலகங்களை மூடி வைக்கவேண்டும் என்றும், பாதுகாப்பு மற்றும் துப்புரவுச் செலவுகளை 10 சதவீதம் குறைக்க வேண்டும் என்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை ஊதியம் மாதத்துக்கு 5 நாள்களுக்கு மட்டுப்படுத்தப்படவேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தவும், தேவையற்ற மின் விளக்குகளை அணைக்கவும், தண்ணீர், எரிபொருள், தொலைபேசி மற்றும் எழுதுபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்குமாறும் அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும், தேவைப்பட்டால், சுகாதார செயலாளரின் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை சுகாதார ஊழியர்களின் வேதனத்தை 15 வீதத்தால் குறைக்கும் வகையில், சுகாதாரச் செயலாளரால் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கையை சுகதார அமைச்சு உடனடியாக இரத்துச் செய்யவேண்டும் என்றும் இல்லையேல் பெரும் தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். (அ-ஏ-இ)

## தேர்தல்...

பிரதேசத்தில் நடந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியை அறிவித்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த நிதி இல்லாத காரணத்தால் திகதி குறிப்பிடாது தேர்தலை ஒத்திவைத்துள்ளது.

இந்தநிலையில் நேற்று பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த வாக்காளர் குழு ஒன்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவரின் பெயருக்கு நேற்று 'மணிஓடர்' மூலம் நூறு ரூபாவில் இருந்து ஐநூறு ரூபா வரை பணம் அனுப்பியுள்ளது.

அரசமைப்பு ரீதியாக வாக்களிப்பது மக்களின் உரிமை என்பதால் தேர்தலை நடத்தி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்று அவர்கள் தெரிவித்தனர்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்திடம் பணம் இல்லை என்று கூறப்படுவதால் எமது பணத்தை அனுப்பி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகின்றோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ-ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்குக

## ஆனைவிழுந்தான் கிராமமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 23

ஆனைவிழுந்தான் கிராமத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகள் நிரந்தரத் தீர்வை வழங்கவேண்டும் என்று அந்தக் கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தக் கிராம மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

1983ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு காணப்படுகின்ற குளத்தின் கீழ் வயல் நிலங்கள் காணப்படுகின்ற போதிலும் அதிகாரிகள் காணிகளை பகிர்ந்தளிப்பதில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. கிராம அபிவிருத்திச் சங்கத்தால் 1983ஆம் ஆண்டில் குடியமர்ந்த குடும்பங்களுக்கும் அந்தக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் காணிகளை பகிர்ந்தளித்த பின்னர் 1995ஆம் ஆண்டின் பின்னர் குடியமர்ந்தவர்களுக்கும் காணிகள் வழங்குங்கள் என அதிகாரிகளுக்கு கோரிக்கைகள் விடுத்தோம்.

எனினும் இதுவரை காணிகள் பகிர்ந்தளிக்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. ஆனைவிழுந்தான் கிராமத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வருகைதந்த பல அரசியல்வாதிகள் வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமலே உள்ளன. எனவே ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள காணிப் பிரச்சினைக்கு அதிகாரிகள் நிரந்தரத் தீர்வு வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றனர். (ம-14-13)



# யாழ்.மாவட்டச் செயலகத்தில் விவசாயக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம், யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் விவசாயம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் குறித்து கலந்துரையாடப்பட்டன. உணவுப் பாதுகாப்பு, உணவு உற்பத்தியின் அடைவு மட்டங்கள், தற்போதைய முன்னேற்றங்கள், உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை எதிர்நோக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள், உணவு வங்கிகளின் சமூக, சமய ரீதியான செயற்பாடுகள், இயற்கை உரப் பாவனை மற்றும் அதன் விநியோகம், எதிர்காலத்தில் எதிர்நோக்கத்தக்க எரிபொருள் பிரச்சினைகள், போசணைக் குறைபாடு மற்றும் அதனைத் தீர்க்கும் வழி வகைகள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மரக்கறி விதைகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்தல், வாழைச்செய்கை அழிவுக்கு காப்புறுதி வழங்குதல், வெளிநாட்டு ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள், ஊழியர்களின் கூலி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக மினி உழவு இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் விவசாயிகளால் முன்வைக்கப்பட்டு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (எ-14-66)



.நசுவில் அன்னை திரேசா முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு, ன்பள்ளி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-14-159)

# உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கக் கூடாது!

## மஹிந்த ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, பெப்.23

உள்ளூராட்சிசபைத் தேர்தலைப் பிற்போடக் கூடாது என்று முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தலைமையில் நேற்றுக் காலை நாடாளுமன்ற அமர்வு கூடிய போது எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சபைப் பீடத்துக்கு வந்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து சபாநாயகர் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார். அமர்வில் பங்கேற்ற பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்படவில்லை. தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராக உள்ளோம். நெருக்கடியான காலகட்டத்திலும் தேர்தல்கள் பல நடத்தப்பட்டுள்ளன.

ஆகவே தேர்தலுக்கு அச்சமடையத் தேவையில்லை. அரசியல் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் நாட்டு மக்களுக்கு உண்டு என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

# யாழ்.நகரப் பகுதிகளில் நாய்களுக்கு கருத்தடை

யாழ்.மாநகர பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை செய்யும் பணிகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை வரைக்கும் நடைபெறவுள்ளது என மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய மாநகர பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு பொதுச்சுகாதாரப் பிரிவுகளிலும் நாய்களுக்கான கருத்தடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 20, 21,22 ஆம் திகதிகளில் கொழும்புத்துறை நல்லூர், அரியாலை, குருநகர், யாழ்.நகர் பிரதேசங்களில் கருத்தடை பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று 23ஆம் திகதி வியாழக்கிழமை வண்ணார் பண்ணை பிரதேசத்திலும் மறுநாள் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவாந்துறை பிரதேசத்திலும் 25ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.நகர் பிரதேசத்திலும் நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளப்படவுள்ளது என மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-17)

**கடை குத்தகைக்குண்டு**

யாழ். நகரப் பகுதியில் அமைந்திருக்கும் உணவகம் ஒன்று அனைத்து தளபாட வசதிகளுடனும் குத்தகைக்கு வழங்கப்படும்.

(CS 23616)(3/6) தொடர்பு : 075 357 6995

**வேலையாள் தேவை**

வாகன உதிரிப்பாக விற்பனையில் முன்அனுபவம் உள்ள ஒருவர் தேவை.

தொடர்பு: 077 179 2577

**DHL உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்

▲UK - 1450/= ▲ Australia - 2800/=

Canada Normal - 1200/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 0777 55 45 28

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு கொத்துறொட்டி போடுதல், பிறைட்றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல் போன்ற மூன்று வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:077 6491 027

(CR 39294) 1-6

**மாப்பிள்ளை தேவை**

01. அனலைதீவு - வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of Optometry, Australia Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் -32633.
02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1991. உத்தரம். Gradute, (Family Law, Lawyer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32297.
03. உரும்பிராய் - மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (V). 1991. புனர்பூசம். MBBS Doctor, Australia வில் வேலை செய்து கொண்டிருக்கும் USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32050.
04. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1992. உத்திரட்டாதி. ACCA Complited Accountant, Canada, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05. தெல்லிப்பளை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1993. அச்சுவினி. BSc Nursing Jaffna, University, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1986, திருவாதிரை. MSc in IT and Charted Financial Analyst, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32904.
07. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1995. அத்தம், BSc, Post Graduate Dip Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
08. அல்வாய். இந்து. கௌரவகுலம் (V). 1987. பரணி. BSC (Hons) Chemical Engineering Technology, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1990. அச்சுவினி. BBA, Accountant, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 31884.
10. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1995. அவிட்டம். Masters of Bio Medical (UK), UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
11. காரைநகர் - பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1995. பூரம். BSc in Accounting and Finance, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
12. உடுவில் - இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மிருகசீரிடம். MBBS Doctor, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 32235. (CS 23610)(3/6)

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ...த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.